## மார்ச் – 15 – வெள்ளி

**ஆண்டவரே! ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்: திபா. 130:1**

**முதல் வாசகம்: ஏசேக்கியல் 18 : 21 – 28**

தீயவரோ தாம்செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டு மனம் மாறி, என்நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி, அவர்கள் சாகார்.அவர்கள் இழைத்த தவறுகள் அனைத்தும் அவர்களுக்கெதிராக நினைக்கப்படமாட்டா. அவர்கள் கடைப்பிடித்த நேர்மையின் பொருட்டு அவர்கள் வாழ்வர்.உண்மையில், பொல்லாரின் சாவையா நான் விரும்புகிறேன்? அவர்கள் தம் வழிகளினின்று திரும்பி வாழவேண்டும் என்பதன்றோ என் விருப்பம்? என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்து, பொல்லாரைப் போல் வெறுக்கத் தக்கவற்றை எல்லாம் செய்தால், அவர்கள் வாழ்வரோ? அவர்கள் கடைப்பிடித்த நேர்மையானதெதுவும் நினைக்கப்படமாட்டாது. அவர்கள் இழைத்த துரோகத்தின் பொருட்டும், செய்த பாவத்தின் பொருட்டும் அவர்கள் சாவர்.ஆயினும், ”தலைவரின் வழி செம்மையானதாக இல்லை” என்று நீங்கள் சொல்கிறீர்கள். இஸ்ரயேல் வீட்டாரே! கேளுங்கள். என் வழியா நேர்மையற்றது? உங்கள் வழிகளன்றோ நேர்மையற்றவை!நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்தால், அவர்கள் தாம் இழைத்த தவற்றின் பொருட்டுச் சாவர்.பொல்லார் தாம் செய்த பொல்லாப்பினின்று விலகி, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால், தம் உயிரை அவர்கள் காத்துக் கொள்வர்.அவர்கள் உண்மையைக் கண்டுணர்ந்து, தாம் செய்த குற்றங்கள் அனைத்தினின்றும் விலகிவிட்டால், அவர்கள் வாழ்வது உறுதி அவர்கள் சாகமாட்டார்.

**பதில்பாடல் :** நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார் தான் நிலைத்து நிற்கமுடியும்

**நற்செய்தி : மத்தேயு 5 : 20 - 26**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன். ”கொலை செய்யாதே் கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்” என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ”தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ ”முட்டாளே” என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் ”அறிவிலியே” என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப்போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசு வரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்” என்றார்.

**தியானம்:** மானிடராகிய நாங்கள் மனம்மாறி புதுவாழ்வு வாழவேண்டுமென்றே இறைவன் விரும்புகின்றார். இதற்காக நாங்கள் இறைவனோடு அனுதினமும் உரையாட வேண்டும், செப வாழ்வில் உறுதிகொள்ள வேண்டும். இவ்வாறாக பாவத்திலிருந்து நாங்கள் மனமாற்றம் அடைந்தோமானால் எமக்கு நிலைவாழ்வு நிற்சயம். “தீயவரோ தாம் செய்த பாவங்களை……வாழ்வது உறுதி அவர்கள் சாகவேமாட்டார்கள்” (எசேக்.18: 21). பாவிகளாகிய நாங்களும் எமது பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டினால் நிற்சயம் மன்னிப்பு தருவார். ஆனால் எமது வாழ்விலோ மன்னிப்பென்பதற்கு இடமேயில்லை. கிறிஸ்து கற்பித்த செபத்தை வாயளவில் சொலலிக் கொள்கிறோமே தவிர (பரலோகத்தில்…..தீமைகளின்று எங்களை இரச்சித்தருளும்) நண்பர்களுக்கிடையோ, சமூகத்திலோ, குடும்ப சகோதர, சகோதரிகளுக்கிடையே போட்டி மனப்பான்மையும், விட்டுக்கொடுக்காத மனநிலையினாலும் அனுதினமும் எமது வாழ்வை அழித்துவிடுகின்றோம்., உறவுகள் மத்தியில் விரிசலை ஏற்படுத்தி விடுகின்றோம். இதை ஆராய்ந்து பார்க்கும் விதத்தில் இன்றைய நற்செய்தி வாசகமும் அமைந்திருக்கின்றது. “நீங்கள் காணிக்கைகளை செலுத்து முன்பதாக உன் சகோதரனுடனோ அல்லது சகோதரியிடமோ மனத்தாங்கல் இருந்தால் முதலில் அவர்களிடம் சென்று ஒப்புரவாகிய பின்பு காணிக்கைகளை செலுத்து” (மத்.5:25) இவ்வாறு பார்க்கின்றோம். இதிலிருந்து நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது இறைவனிடம் நாங்கள் எங்களை வெறுமையாக்கி தூய்மையான வாழ்வு வாழ வேண்டுமென்பதேயாகும். எனவே இத்தவக்காலமானது நாங்கள் புதுவாழ்வடைய எமக்கு கொடுத்த நல்லதொரு சந்தர்ப்பம் என்பதை உணர்ந்து மனமாற்றமடைய இக்காலத்தை பயன்படுத்துவோம்.